அடி வாங்கிய உடனேயே, நம்முடைய தமிழ்நாட்டிலிருந்து, அதுவும் இந்தியா என்று சொல்லும்போது தென்னாட்டிலிருந்துதான் அதிகமான அளவுக்கு, வெளிநாட்டுக்கு வேலைக்குச் செல்கின்றார்கள். அதிலும், நம்முடைய தமிழ்நாட்டிலேதான் கணினியை அறிந்தவர்கள் முழுமையாக இருக்கின்ற காரணத்தினால், இங்கிருந்து போகின்றவர்களுக்கு நல்ல வேலைவாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால், அங்கே அடி வாங்கிவிட்டதன் காரணமாக வேலைவாய்ப்பு போய் விட்டது. எனவே, அவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தரவேண்டுமென்ற மனப்பான்மையோடு—Business Process Outsourcing —அதாவது வணிக செயல்பாட்டுச் சேவை வழங்கும் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தி, அதில் சென்னை மட்டுமே மையமாக இருக்கக்கூடாது; தமிழகத்திலே கோயமுத்தூர், திருச்சி, சேலம், மதுரை மற்றும் திருநெல்வேலி போன்ற இரண்டாம் நிலை நகரங்களும், அதோடுமட்டுமல்லாமல், மூன்றாம் நிலை நகரங்களான திருப்பூர், ஓசூர், சிவகாசி போன்ற மூன்றாம் நிலை நகரங்களும் அதிலே சேர்க்கப்பட வேண்டுமென்று அம்மா அவர்கள் உத்தரவிட்டு, அதன் அடிப்படையிலே ஆய்வு நடத்திக்கொண்டு வருகின்றோம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், தூத்துக்குடியிலே அவர்கள், தனியார் அந்த கணினி மென்பொருள் உற்பத்தி மையம் ஆரம்பிக்க முன்வந்தால் அரசு நிச்சயமாக அதற்கு உதவி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பெருமாள்

திரு. என்.கே. பெருமாள்: மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 33, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

33—

உரத் தொழிற்சாலை

•26469-திரு. ஜி.கே. மணி:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2005 பிப்ரவரி 3

(அ) கூட்டுறவுத் துறையின் மூலம் தமிழ்நாட்டில் ஒரு பெரிய உரத் தொழிற்சாலை தொடங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தமிழக விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து உரங்களும் தட்டுப்பாடின்றி கிடைத்து வருகின்றன. உரத் தொழிற்சாலை அமைப்பதற்குப் பல கோடி ரூபாய் மூலதனம் தேவைப்படுவதாலும், தற்போது கூட்டுறவு நிறுவனங்களின் நிதிநிலைமை திருப்திகரமாக இல்லாததாலும், கூட்டுறவுத் துறையின் மூலம் தமிழ்நாட்டில் மிகப் பெரிய ஒரு உரத் தொழிற்சாலை தொடங்கப்பட சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டினுடைய ஆதாரத் தொழிலாக இருப்பது வேளாண்மைத் தொழில். ஆகவே, உழவர்கள் சேற்றிலே கை வைத்தால்தான் நாம் எல்லோரும் சோற்றிலே கை வைக்க முடியும் என்கின்ற அந்த நிலை இருக்கின்ற காரணத்தினாலே — இன்று உழவர்கள் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சேற்றிலே கால் வைத்தால்தான்! (சிரிப்பு)

திரு. ஜி.கே. மணி: இல்லை. சேற்றிலே கால் வைத்தாலும், நடவு நடுவது கையால்தான் நட முடியும். சேற்றிலே கால் வைத்து நடவு நடலாம் என்றால் முடியாது. நெல் விளையாது. (சிரிப்பு) சேற்றிலேயும் கை வைக்கவேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேற்றிலேயும் கை வைக்கவேண்டும்; சோற்றிலேயும் கைதான் வைக்கவேண்டும். ஆகவே, அப்படிப்பட்ட விவசாயிகள் இன்று பல்வேறு சோதனைகளுக்கு ஆளாகிக்கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுடைய வாழ்க்கை முன்னேறாமல் நம்முடைய மாநிலம் முன்னேறியதாகக் கருத முடியாது. இப்போது அமைச்சர் அவர்கள்கூடச் சொன்னார்கள். யூரியா தட்டுப்பாடு மிக நெருக்கடியாக இருக்கிறது. விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை. அதிலும், குறிப்பாக, அடக்க விலையிலே கிடைக்கவில்லை. தனியார் உற்பத்தி செய்கின்ற காரணத்தினாலே கடுமையான விலை உயர்வு உள்ளது. யூரியா மட்டுமல்ல; உரம், பூச்சி

2005 பிப்ரவரி 3]

மருந்து ஆகிய எல்லாவகைகளும் உயர்ந்த விலையில் இருக்கின்ற காரணத்தினாலே, விவசாயிகள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, கூட்டுறவுதான் இன்று நாட்டுயர்வுக்கு மிக முக்கியமானதாக இருக்கிறது. அந்தத் தத்துவத்தின் அடிப்படையிலே அமைக்கப்பட்ட காரணத்தினாலே, இந்தக் கூட்டுறவுத் துறை வாயிலாக ஒரு பெரிய அளவிலான தொழிற்சாலையை தமிழகத்திலே உருவாக்கினால், இந்தக் கூட்டுறவுத் துறை வாயிலாக எல்லா விவசாயிகளுக்கும் முறையாக உரம், பூச்சி மருந்து கிடைக்க வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலேதான் . . .

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரின் பதிலுரை முடிகிற வரைக்கும் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஜி.கே. மணி: அரசு கனிவோடு மறுபரிசீலனை செய்து, தமிழகத்திலே கூட்டுறவுத் துறை வாயிலாக ஒரு பெரிய தொழிற்சாலை அமைக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழ்நாட்டில் எங்கேயும் உரத் தட்டுப்பாடு என்கின்ற நிலைமை இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, யூரியா போன்ற உரங்கள் கூடுதலான விலைக்கு விற்கப்படுவது கிடையாது.

தமிழ்நாட்டிலே, மத்திய அரசு நிறுவனங்களான Madras Fertilizers Limited, நெய்வேலி நிலக்கரி நிறுவனம் மற்றும் தனியார் நிறுவனமான SPIC நிறுவனம், பல்வேறு வகையான உரங்களை உற்பத்தி செய்து வருகின்றன. கூட்டுறவுத் துறையில் இந்திய உழவர் உரக் கூட்டுறவு நிறுவனம் என்று சொல்லப்படுகிற IFCO, GRIFCO கூட்டுறவு நிறுவனமும், வட மாநிலங்களில் அமைந்துள்ள உரத் தொழிற்சாலைகளும் பல்வேறு உரங்களை உற்பத்தி செய்கின்றன.

தமிழக விவசாயிகளுக்குத் தேவையான உரங்களை, மேற்கண்ட நிறுவனங்கள் மற்றும் தனியார் வியாபாரிகள் மூலம் விற்பனை செய்து வருகின்றன. தமிழ்நாட்டில், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகிய கூட்டுறவு நிறுவனங்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக அவ்வங்கிகளில் கடன்

பெறும் உறுப்பினர்களுக்கும், இதர விவசாயிகளுக்கும், ரொக்க அடிப்படையிலும் அவர்களுக்குத் தேவையான உரங்களை மேற்கண்ட உர உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்து விநியோகம் செய்து வருகின்றன. எனவே, உரத் தொழிற்சாலை ஆரம்பிக்கின்ற திட்டம் எதுவும் தற்போது கூட்டுறவு நிறுவனங்களிடம் இல்லை என்று சொல்லி அமர்கிறேன்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(பட்டியல்கள் 1, 2, 3 மற்றும் 4) @

முதல் பட்டியல்

1—

சார்பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம்

வினா எண் 17286—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பெருமகளூர் பேரூராட்சி, பெருமகளூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: பட்டுக்கோட்டை பதிவு மாவட்டம், பெருமகளூர் சார்பதிவாளர் அலுவலகம் அரசாணை (நிலை) எண் 47, வணிக வரித் துறை, நாள் 28-5-2003-ன்படி மூடப்பட்டு 1-6-2003 முதல் பேராவூரணி சார்பதிவாளர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

@ இந்தப் பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதலளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.